பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை 29.11.2020 கதிர் 255

# குடாநாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை; மக்கள் எவரும் குழப்பமடைய வேண்டாம்!

## பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் சீற்றம்

யாழ். குடாநாட்டை முடக்குவது தொடர்பில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. ஊடகங்கள் செய்திகளை வெளியிடும்போது மக்களை அச்சுறுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான வகையில் செய்திகளை வெளியிடக்கூடாது.

- இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டை முடக்குவது தொடர்பில் பத்திரிகை ஒன்றில் 2



# தீபத் திருவிழாவையும் குழப்ப முயன்ற படை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.29

இணுவில் கந்தசாமி கோவில், மல்லாகம் சாலம்பை முருகன் ஆலயங்களில் கார்த்திகை தீபகங்கள் ஏற்ற படையினர் தடை விதித்த நிலையில் நிர்வாகத்தினரின் முயற்சியினால் இறுதியில் அதற்கு அனுமதிக்கப்பட்டது.

கார்த்திகைத் தீபத்திருநாளான இன்றைய தினம் வீடுகள் ஆலயங்களில் தீபம் ஏற்ற தயாரான நிலையில் பல இடங்களில் படையினர், பொலிஸார் தடை விதித்தனர் . இன்றைய தீபம் ஏற்றலிற்கும் மாவீரர் நாளிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது எனவும் இன்றைய தீபம் சைவ மக்களின் 2

# ஆனையிறவிலும் சங்குப்பிட்டியிலும் உள்வருவோரைப் பதிவு செய்யுங்கள்!

## யாழ்ப்பாணம் பொது சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.29

பிற மாகாணங்களில் இருந்து யாழ் குடாநாட்டிற்குள் வருபவர்களை முழுமையாக இனம்காண முடியாத நிலமை காணப்படுவதனால் ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டியில் படையினர் மூலம் பதிவுகளை மேற்கொண்டு சுகாதார திணைக்களத்திற்கு வழங்க ஆவன செய்யுமாறு மாகாண ஆளுநருக்கு யாழ்ப்பாணம் பொது சுகாதார வைத்திய அதிகாரி கடிதம் எழுதியுள்ளார். 2

# யாழ். நல்லை மண்ணில் 'சிவகுரு' ஆதீனம் உதயம்



யாழ்ப்பாணம், நல்லூரில் 'சிவகுரு' ஆதீனம்உதயமாகியுள்ளது.

திருக்கார்த்திகைத் திருநாளான இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மணி 2

# மண் லொறியால் மோதி கான்ஸ்டபிள் கொலை!

## தப்பியோடிய சாரதி கைது

குருநாகல் - கொப்பேகன பகுதியில் மண் லொறியால் மோதி பொலிஸ் கான்ஸ்டபிளைப்படுகொலைசெய்த 27 வயதான அந்த லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நிக்கவரெட்டிய பகுதியில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 2

# இழுத்து மூடப்பட்டது அலரி மாளிகை!

## உண்மையைப் போட்டுடைத்த பஸில் ராஜபக்ஷ பிரதமரின் ஊடகச் செயலாளர் மீதும் பாய்ச்சல்



கொழும்பு,நவம்பர்29

அலரி மாளிகை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. எவரும் அங்கு செல்ல முடியாது. நான் கூட அங்கு சென்று பணியாற்ற முடியாதுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ 'சண்டே ரைம்ஸ்' இற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகை முடக்கப்படவில்லை எனப் பிரதமரின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும் அவர் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார். 2

# கொழும்பு, கம்பஹாவில் சில பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சிலவற்றை விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளது. 2

# காங்கேசன்துறைக் கடலில் குளித்த 2 இளைஞர்களைக் காணவில்லை!



காங்கேசன்துறைக் கடலில் குளித்த இளைஞர்கள் இருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காங்கேசன்துறை தல்செவன இராணுவ 2

# 'கொரோனா'வின் பிடிக்குள் இருந்து இதுவரை 17 ஆயிரம் பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 346 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 2 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 5 ஆயிரத்து 877 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 109 பேர் உயிரிழந்துள்ளனர். 2

# இந்தியாவை இலங்கை முழுமையாக நம்பாது!!!

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இடைநடுவே கைவிடும் இந்தியா போன்ற 2

# மதில் உடைந்து விழுந்ததில் காயமுற்ற சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், உப்புவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உயரமான காணி ஒன்றில் அமைக்கப்பட்ட மதில் இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தான்.

புளியங்குளம் - தேவநகர் பகுதியைச் சேர்ந்த தனேந்திரன் அர்ஜுன் (வயது 10) சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

இந்தச் சிறுவனின் வீட்டுக்கு அருகில் உயரமான காணியில் அமைக்கப்பட்ட மதில் காற்றுடன் கூடிய கடும் மழையால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடிந்து விழுந்த நிலையில் சிறுவன் சிக்குண்டான்.

அயலவர்களின் உதவியுடன் அரை மணி நேரத்துக்குள் சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 2

# போகம்பரை சிறையிலிருந்து நான்கு கைதிகள் தப்ப முயற்சி

## வேட்டுக்களைத் தீர்த்து அதிகாரிகள் முறியடிப்பு

போகம்பரை சிறைச்சாலையிலிருந்து தப்ப முயன்ற 4 கைதிகள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

போகம்பரை பழைய சிறைச்சாலையில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த கைதிகளில் நால்வரே தப்பிச் செல்ல முயன்றனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் எச்சரிக்கை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தே இவர்களைக் கைதுசெய்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொழும்பு, கம்பஹா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு மாவட்டத்தில் கடற்கரை பொலிஸ் வலயம், புறக்கோட்டை, மட்டக்குளி ஆகிய பகுதிகள் நாளை அதிகாலை 5 மணிக்கு விடுவிக்கப்படும் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்குளி பொலிஸ் பிரிவில் ரன்திய உயன வீட்டுத் திட்டம் மற்றும் பேர்கியூன் தெற்கு ஆகிய பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் ராகம, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளையும் நாளை அதிகாலை 5 மணிக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடுகளைத் தொடர்ந்தும் நம்பி அவர்களிடம் தங்கியிருக்காது இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நிறுவனங்களுடனும் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடனும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, நீர்வளங்கள், மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமாக இலங்கை அதன் அமைவிடத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால் சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் எம்மை விடப் பலமான நாடுகளாக வளர்ச்சி கண்டுள்ளன. எனினும், இனியும் நாம் அதே தவறிழைத்து விடக்கூடாது.

எனவே, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கான எரிபொருள் சேவையை வழங்கவும், திருகோணமலை துறைமுகத்தைப் பயன்படுத்தி இந்தியாவினூடாக மேற்கு - கிழக்கு நோக்கி பயணிக்கும் கப்பல்களுக்கான எரிபொருள் சேவையை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். அதேபோல் விமானங்களுக்கு எரிபொருள் வழங்குதல் மற்றும் கனியவள தேவைகளை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எமது நாட்டைச் சுற்றி கனிய வளங்கள் உள்ளன. இயற்கை எரிவாயு, எண்ணெய் வளங்கள் உள்ளன. ஆனால், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள எம்மால் முடியாது போய்விட்டது. இதில் பல இடங்களில் நாம் தவறிழைத்துவிட்டோம்.

குறிப்பாக 2010 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் நாம் இது குறித்த இணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்த வேளையில் அவர்களின் நிதி பற்றாக்குறை காரணமாக இடைநடுவே விலகிக் கொண்டனர்.

எனவே, நாம் இந்தியாவை மாத்திரம் நம்பி அவர்களின் தங்கி இருக்காது, இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நிறுவனங்களுடன் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது - என்றார்.

## மதில் உடைந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தீபத் திருவிழாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழாபாடு எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து இறுதியில் தீபம் ஏற்ற அனுமதிக்கப்பட்டது. இதனால் படையினர் தடுக்கும்போது இருந்த குழப்ப நிலைமை தனிந்து இயல்பாக வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

## மண் லொறியால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹாத்தலவ பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலை சுற்றிவளைப்பதற்காக நேற்று நள்ளிரவு 05 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சென்றிருந்தனர்.

இதன்போது, அவர்களில் ஒருவர் மணல் லொறியை நிறுத்த முயன்றபோது, லொறியைச் சாரதி நிறுத்தாமல் அவர் மீதி மோதிவிட்டு லொறியுடன் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த 32 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் நிக்கவெரட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது, அவர் உயிரிழந்திருந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். பொலிஸ் கான்ஸ்டபிள் மீது மோதிய லொறி நிக்கவெரட்டிய பகுதியில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். நல்லை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒலிக்கும் நேரத்தில் சிவகுரு ஆச்சிரமம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இது சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## இழுத்து மூடப்பட்டது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அலரி மாளிகை முடக்கப்படவில்லை என்று பிரதமரின் ஊடகச் செயலாளர் சொன்னது முற்றிலும் பொய். அலரி மாளிகை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. என்னால் அங்குள்ள அலுவலகங்களைப் பயன்படுத்த முடியவில்லை.

உண்மையை அறிய விரும்பினால் நீங்கள் யாரையாவது அனுப்பிப் பார்க்கலாம். அந்தப் பகுதி முற்றாக மூடப்பட்டுள்ளது. பணியாளர்களை வீட்டிலிருந்து பணிபுரியுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

பிரதமரின் ஊடகச் செயலாளருக்கு தான் என்ன செய்கின்றேன் என்பது தெரியாது. உண்மைக்கு மாறான விடயங்களை தெரிவிப்பதன் மூலம் பிரதமரின் பெயருக்குக் களங்கத்தையும் அவருக்கு தர்மசங்கடமான நிலையையும் ஏற்படுத்துகின்றார்.

என்னைப் பற்றியும் பிரதமரின் ஊடகச் செயலாளர் பிழையான விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் எதனையும் மறைக்க விரும்புபவரில்லை. அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படையானவர்; முகத்துக்கு நேரே பேசுபவர்.

நாங்கள் வெளிப்படையானவர்களாக மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்காதவர்களாக இருக்கவேண்டும்.

உண்மையை மறைப்பதால் என்ன பயன்? பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட முடக்கலின் பின்னர் அலரிமாளிகைக்குச் செல்லவில்லை - என்றார்.

## 'கொரோனா'வின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 988 ஆக அதிகரித்துள்ளது.

## காங்கேசன்துறைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நட்சத்திர விடுதிக்கு அருகாமையில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

தையிட்டியைச் சேர்ந்த 24 மற்றும் 32 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயுள்ளனர்.

இருவரையும் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஆயிரம் ரூபா கதை ஏமாற்று வித்தையே

## அரசைத் தாக்குகின்றார் திகா

கொழும்பு, நவ. 29

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு என அரசு சொல்வது ஏமாற்று வித்தையே என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக் கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தாலும் அது அடிப்படை நாள் சம்பளமா என்பது பற்றி விவரிக்கப்படவில்லை.

இது தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. எனவே, இதுவொரு ஏமாற்று வித்தை. அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுக்கமாட்டார்கள் - என்றார்.

## குடாநாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறு எந்தவிதமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

காரைநகர் பகுதியில் கொழும்பிலிருந்து வருகை தந்த ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், குறித்த நபருடன் நேரடித் தொடர்புகளைப் பேணிய 21 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த 63 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பி.சி.ஆர். முடிவுகளில் பலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டால் மாத்திரம், சில வேளைகளில் காரைநகர் பிரதேசம் முடக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் தற்போது வரை எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை - என்றார்.

## ஆனையிறவிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2020 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் எழுத்தில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இரு பாதைகள் ஊடாகவும் வரும் உள்ளூர் வாசிகள் அன்றி வெளிமாகாணத்தவர்கள் அனைவரதும் பதிவுகள் பேணப்பட்டு உடனுக்குடன் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குவதன் மூலமே முழுமையாக கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்த முடியும்

இவ்வாறு சுகாதார வைத்திய அதிகாரியினால் எழுதப்பட்ட கடிதத்தின் பிரதிகள் மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட பின்பே கொழும்பிலிருந்து வந்த காரைநகர் வாசி மூலம் மேலும் பரவல் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.


மாலை திருமண சேவை

Maalai Matrimony



இணையத்தள திருமண சேவை

www.maalai.com

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| Reg No 68062<br>1986<br>இந்து கரையார்<br>France (PR)<br>5' 10"<br>உத்திரட்டாதி (மீனம்) | Reg No 78785<br>1994<br>இந்து வேளாளர்<br>France (PR)<br>5' 4"<br>சதயம் (கும்பம்) |
| Reg No 53388<br>1989<br>இந்து வேளாளர்<br>உள்நாட்டுத் தொழில்<br>5' 8"<br>அனுசம் (விருட்சியம்) | Reg No 55044<br>1998<br>இந்து வேளாளர்<br>SLC (Beautician)<br>5' 10"<br>பரணி (மேடம்) |
| Reg No 44974<br>1989<br>இந்து வேளாளர்<br>Swissland<br>5' 12"<br>அவிட்டம் (கும்பம்) | Reg No 57099<br>1993<br>இந்து வேளாளர்<br>மாவிட்டபுரம்<br>Nutritionist - 5' 2"<br>மூலம் (தனுசு) |
| Reg No 84983<br>1984<br>இந்து V+K<br>Germany<br>5' 6"<br>ரோகிணி (ரிஷபம்) | Reg No 55038<br>1989<br>இந்து வேளாளர்<br>மல்லாவி (ஆசிரியர்)<br>5' 1"<br>ஆயிலியம் (கடகம்) |

எம்மிடம் தரகுக் கட்டணம் இல்லை

Maalai Matrimony

தொடர்புகளுக்கு - 077 408 8241

இணையத் தளம் - www.maalai.com

DMI தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில், யாழ்ப்பாணம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வடக்கில் மட்டும் காணி அதிகாரத்தை பிடுங்கி வைத்திருக்கும் கொழும்பு அரசு

கொழும்பு அரசின் மற்றொரு தமிழர் விரோத நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதன் சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

அந்த விவகாரத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டி உள்ளன.

ஒன்று – பதினொரு ஆண்டுகளாக நீடித்த இந்த அராஜகப் போக்கை – அதிகார அத்துமீறல் நடவடிக்கையை – தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும், அதுவும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் கவனத்திலோ, அவதானத்திலோ எடுக்கத் தவறியுள்ளமை.

அடுத்தது – அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்தில் தமிழர்களை – சிறுபான்மையினரை – எப்படி வெட்டி ஒதுக்கிப் பேரினவாதம் நடக்கின்றது என்பது. சிறுபான்மையினர் பிரதேசங்களுக்கு என சட்ட ரீதியாக – அரசமைப்பு ரீதியாக – வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பேரினவாத அரசு பிடுங்கி, அதன் மூலமே தமிழர் தாயகத்தில் தமிழர்களை சிறுபான்மையினராக்கும் தனது ஆக்கிரமிப்புத் தந்திரத்தை முன்னெடுக்கின்றது என்பது.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்யும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பெரும் இழுபறி மற்றும் பின்னடைவுகளுக்கு மத்தியில் இலங்கை அரசு கொண்டு வந்தது.

அதில் இரண்டு முக்கிய விடயங்களின் அதிகாரப் பகிர்வும் இடம்பெற்றிருந்தன. ஒன்று – பொலிஸ் அதிகாரம்; அடுத்தது – காணி அதிகாரம்.

அரசமைப்பு ரீதியாக 13 ஆவது திருத்தத்தில் அது இடம் பெற்றிருப்பதால் அது நாட்டின் உயர் சட்டப்படியான விவகாரமாகின்றது.

ஆனால், நாட்டின் அதி உயர் – உன்னதமான – சட்டத்தில் உள்ள அந்த விடயங்களைக் கூட அவை சட்டமாகி முப்பதிரண்டு ஆண்டுகள் கழிந்தும் சிங்களம் இன்னுமே நடைமுறைப்படுத்தவில்லை. தமிழர்களைப் பொறுத்தவரை அந்த அதிகாரப் பரவலாக்கம் – 13 ஆவது திருத்தம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு – வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்; எட்டாக் கனிதான்.

இவ்விடயத்தில் வேறு வேடிக்கையும் உண்டு.

காணி அதிகாரம் மாகாணங்களுக்குப் பரவலாக்கப்படுகின்றது என்று அரசமைப்பில் கூறப்பட மறுபுறத்தில், காணி தொடர்பாக மாகாணங்களுக்கு இருக்கின்ற கொஞ்ச நஞ்ச அதிகாரத்தையும் கூட பறிக்கும் கைங்கரியமே இங்கு ஒப்பேறுகின்றது.

அதிலும் கூட, பேரினவாதம் தனது கொடூர இனப்பாகுபாட்டுப் போக்கை – பாரபட்ச அத்துமீறலை – காட்டத் தவறவில்லை என்பதுதான் விவகாரமாகும்.

சிறுபான்மையினரான தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்குத்தான் மாகாணசபை முறைமை வந்தது.

அதன் கீழான முக்கிய அதிகாரப் பரவலாக்கலான காணி விவகாரத்தை மாகாணங்களுக்குப் பகிர மறுத்தமை மட்டுமல்ல, ஏற்கனவே மாகாணங்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச அதிகாரங்களை தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணத்தில் மட்டும் அரசு பிடுங்கி, அதிகார அட்டகாசம் பண்ணி வைத்திருக்கின்றது.

இதனையே நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி வினாயெழுப்பியிருக்கின்றார் சாள்ஸ் நிமலநாதன் எம்.பி.

ஒவ்வொரு மாகாணங்களுக்கும் காணி ஆணையாளர்கள் இருக்கின்றனர். இவர்கள் தத்தமது பிரதேசங்களில் தேவைப்படும் சமயங்களில் காணி கச்சேரிகளை நடத்துவர். தேவைப்படும் சமயங்களில் தமது பிரதேசங்களில் உள்ளவர்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் 'பேர்மிட்' போன்றவற்றை ஒப்பமிட்டு வழங்குபவர். இந்த அதிகாரம் நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களினதும் காணி ஆணையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாண ஆணையாளருக்கும் மட்டும் 2009 இல் யுத்தம் முடிந்த காலத் தொட்டு அந்த அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கின்றது. கொழும்பில் காணி ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெற்றுத்தான் வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் எதுவும் செய்ய முடியும் என்ற கட்டாயக் கட்டுப்பாடு உள்ளது.

இதற்கே, கடும் ஆட்சேபனை தெரிவித்து சாள்ஸ் நிமலநாதன் குரல் எழுப்பியிருக்கின்றார்.

கூட்டமைப்பு எம்.பிக்கள், தலைவர்கள் முன்னைய நல்லாட்சி அரசில் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து, விவகாரத்தை அப்போதே நகர்த்த முயன்றிருப்பார்களாயின் அச்சமயமே இவ்விவகாரத்துக்குத் தீர்வு கண்டிருக்க முடியும்; காலத்தையும் சந்தர்ப்பத்தையும் தவற விட்டு விட்டோம் என்பதுதான் நிஜம்.

இப்போது முழித்துக் கொண்டு, உண்மையை அம்பலப்படுத்த முயன்றிருப்பது நல்ல முயற்சி.

## கிராமங்களின் முன்மொழிவுக்கே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை

### பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்



வரவு – செலவுத் திட்டத்தை செயற்படுத்தும் போது கிராமியக் குழுக்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்கி மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பஸில் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு–

இம்முறை மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், கிராமத்திலுள்ள சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிற அமைப்புகளின் பங்களிப்புடன், கிராமியக் குழுக்களுக்கு முன்வைக்கப்படும் கிராம மக்களின் முன்மொழிவுகளை மேலும் முறையாக ஆய்வு செய்து, அதனை முன்னுரிமை அளிப்பதனையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் கிராமிய உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கு மேலும் ரூபா 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் தொழில் முனைவோரை உருவாக்கி அவர்களது உற்பத்திகளை விநியோகிப்பதற்கு கிராமிய மட்டத்தில் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அனைத்து கிராமங்களுக்கும் சென்று கிராம மக்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அவர்களின் பங்கேற்புடன் 'வேலைத் திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' செயல் திட்டத்தை செயற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்த வரவு – செலவுத் திட்டம் உண்மையான இலங்கையின் அடையாளம், கலாசாரம் மற்றும் உள்ளூர் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட வரவு – செலவுத் திட்டம். அதற்கு மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் தலையிடுமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு அமைச்சுக்களுக்கிடையேயும் முறைகள் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். அதேபோன்று கிராம மட்டத்திலும் பல்வேறு கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏற்படக்கூடும்.

அதனால் கிராமத்தின் பிரதான குழுக்கள் ஊடாக முன்னுரிமையளித்து, பிரதேச அபிவிருத்தி குழுக்களில் அங்கீகரித்து வரவு செலவுத் திட்டத்தை செயற் படுத்த வேண்டும். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இன்னும் திறம்பட மேற்கொள்ள முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை ஆரம்பிப்பு!





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் நோயாளர் பராமரிப்புச் சேவை அலுவலகத்தை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய வைத்தியர் விமலசேன, நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன், வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ஜெயபாலன் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

கொரோனா பாதிப்பால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மார்ச் மாதம் நோயாளர் பராமரிப்புச் சேவை, வைத்தியசாலை வாகன பாதுகாப்பு நிலையம் என்பன தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன. இதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நோயாளர் பராமரிப்புச் சேவை மற்றும் வாகன பாதுகாப்பு நிலையம் என்பன நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் வைத்தியசாலை சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## யாழ். ஆஸ்பத்திரி பி.சி.ஆர். சான்றிதழை விமான நிலையத்தில் ஏற்பதற்கு மறுப்பு!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரிசோதனையின் பெறுபேறு செல்லாது என்றும், கொழும்பு நவலோகாவில் புதிய பரிசோதனை மேற்கொண்டு வருமாறும் விமான நிலையத்தில் பயணிகள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்து நின்றவர்கள் உட்பட வெளிநாடுகளிற்கு பயணிப்பவர்கள் அனைவரும் விமானம் ஏறுவதற்கு முன்பு 72 மணித்தியாளங்களிற்கு உட்பட்ட நேரத்தில் பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை சான்றிதழ் சமர்ப்பித்தே விமானத்தில் பயணிக்கும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

இந்த நடைமுறைக்கு அமைய ஆரம்பத்தில் வடக்கில் இருந்து பயணிப்பவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட சான்றிதழுடன் சென்ற நேரம் விமான நிலையத்தில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்தல் சகிதம் செல்பவர்களுக்கு விமான நிலையத்தில் அனுமதி மறுக்கப்படுகின்றது.

அவர்கள் கொழும்பில் உள்ள நவலோகா வைத்தியசாலையில் பரிசோதனை மேற்கொண்டு அந்தச் சான்றிதழை பெற்று வருமாறு பணிக்கப்படுகின்றனர். இதற்கமைய நவலோகா வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனை மேற்கொண்டால் அங்கு ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபா பணம் அறவிடப்படுகின்றது.

# பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலைக்கு தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுக்கும் - கனிமொழி

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலைக்கு தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கனிமொழி மேலும் கூறியுள்ளவை வருமாறு –

விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்ற தேர்தல் பரப்புரை பிரசாரத்தை, இன்று (ஞாயிற்றுக்கிழமை) எடப்பாடியில் ஆரம்பிக்க உள்ளேன்.

மேலும், தி.மு.க.தேர்தல் அறிக்கை கூட்டத்தில் அடுத்த முறை நிச்சயமாக பங்கேற்பேன். தமிழகத்திற்கு நிவர் புயல் நிவாரண தொகையையும், ஏற்கனவே நிலுவையில் உள்ள நிவாரண தொகையையும் சேர்த்து மத்திய அரசிடம் இருந்து தமிழக முதலமைச்சர் பெறுவாறாயின் மகிழ்ச்சிதான்.

சென்னையில் கடந்த முறை மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது, எந்தவித முன் எச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காதமை போல இந்த முறையும் மக்களை பாதுகாக்கத் தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அனைத்து துறைகளிலும் முதலிடம் என கூறும் தமிழக அரசால் ஒரு வேலை வாய்ப்பை கூட உருவாக்க முடியவில்லை. இந்த நிலையில் தமிழக அரசு எதில் முதலிடம் என தெரியவில்லை. நிவர் புயலின்போது தமிழக அரசு எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காததால் தான், நிவர் புயல் தனது சீற்றத்தை குறைத்து கொண்டதோ? என எண்ண தோன்றுகிறது.

இதேவேளை பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலைக்கு தி.மு.க.தொடர்ந்து குரல் கொடுக்கும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தடுப்பூசி தயாரிக்கும் ஜைடஸ் காடிலா நிறுவனத்தில் பிரதமர் மோடி ஆய்வு!



கொரோனா தடுப்பூசி தயாரிப்பு பணிகளை, பிரதமர் மோடி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மருந்து தயாரிக்க இந்தியாவில் 7 நிறுவனங்களுக்கு மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்தது.

இதில் 3 மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு நேரில் சென்று பிரதமர் நரேந்திர மோடி ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்.

முதல்கட்டமாக குஜராத் மாநிலம் அகமதாபத்தில் உள்ள ஜைடஸ் காடிலா நிறுவனம் மேற்கொள்ளும் ஜைகோவ் – டி என்ற தடுப்பூசியின் 2 ஆம் கட்ட பரிசோதனையைப் பிரதமர் மோடி சென்று பார்வையிட்டமையுடன் மருந்து தயாரிப்பு நிலைகள் தொடர்பாக ஆய்வாளர்களிடம் கேட்டறிந்தார்.

அந்நிறுவனம் தயாரித்த து. அகமதாபாத் பயணத்தை முடித்துக்கொண்டு புனேவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் மற்றும் ஐதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனங்களிலும் பிரதமர் மோடி ஆய்வு செய்கிறார்.

ஜைடஸ் நிறுவனம் உருவாக்கி வரும் உள்நாட்டு மரபணு சார்ந்த மருந்து தொடர்பாக அதிகம் தெரிந்துகொள்ள அகமதாபாத்தில் உள்ள அந்த நிறுவனத்துக்கு சென்றார் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

கொரோனா தடுப்பு மருந்து பயணத்தில் ஜைடஸ் நிறுவனத்துக்கு முழு ஒத்துழைப்பை இந்திய அரசு அளிக்கும் என்றும் மோடி டுவிட்டரில் கூறியுள்ளார். கொரோனா தடுப்பு மருந்து தயாரிக்கும் குழுவுக்கு பிரதமர் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

# நக்சலைட்டுகள் வெடிகுண்டை வெடிக்க வைத்ததால் சி.ஆர்.பி.எவ். அதிகாரி சாவு!



சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் சக்திவாய்ந்த வெடிகுண்டை வெடிக்க வைத்ததில் சி.ஆர்.பி.எவ். அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

சி.ஆர்.பி.எவ். இன் வனப்பிரிவான கோப்ராவின் 206 ஆவது பட்டாலியனை சேர்ந்தவர்கள் அரவ்ராஜ் மேத்தா மலைப்பகுதியில் நக்சல் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர், அப்போது சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது.

அதில் பலத்த காயமடைந்த உதவி கமாண்டன்ட் நிதின் பாலேராவ் என்பவர் ராய்ப்பூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் ஏழு ஜவான்கள் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கடலில் விழுந்த மிக் விமானத்தின் விமானியைத் தேடும் பணி தீவிரம்



மிக் 29 கே விமானம் பயிற்சியின் போது கடலில் விழுந்து நொறுங்கிய நிலையில் அதிலிருந்த விமானியைத் தேடும் பணிக்காக போர்க்கப்பல்கள், ஹெலிக்கொப்டர்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை அரபிக் கடலில் நிகழ்ந்த விபத்தில், விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளில் ஒருவர் மீட்கப்பட்டுள்ள நிலையில் இநிஷாந்த் சிங் என்ற மற்றொரு விமானி மாயமானார்.

விமானம் நொறுங்கும் நேரத்தில் கடலில் பாராசூட் மூலம் குதித்து அவர் உயிர் தப்பியிருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் அவரை கடலில் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

போர்க்கப்பல்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கடற்படையினர் அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# இந்தியாவில் இருந்தே கொரோனா பரவியது!

### குற்றஞ்சாட்டுகிறது சீனா

இந்தியாவில் இருந்தே கொரோனா வைரஸ் தம் நாட்டுக்குப் பரவியதாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

சீனாவின் நாளிதழ் ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்தாலி, அமெரிக்கா, ஐரோப்பா என 8 நாடுகள் மீது எந்தவித ஆதாரமும் இல்லாமல் குற்றம் சுமத்திய சீனா, தற்போது இந்தியாவில் இருந்தே கொரோனா வைரஸ் பரவியதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு கொரோனா பரவியதாகத் தெரிவித்துள்ள சீனா, மாசுபட்ட தண்ணீரால் வுகான் வரை பரவியதாகக் கூறியுள்ளது.

இந்த நிலையில், சீனாவின் நாளிதழ் ஒன்றில் வெளியான இந்த ஆய்வு முடிவு அபத்தமானது என்று கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் நிபுணர் டேவிட் ராபர்ட்சன் நிராகரித்துள்ளார்.

# காஷ்மீரில் ஜனநாயகத்தை சீரழிக்க பாகிஸ்தான் பயங்கரவாதிகள் முயற்சியாம்



காஷ்மீரில் ஜனநாயக நடைமுறையைச் சீரழிக்க பாகிஸ்தான் பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றனர் என இராணுவத் தளபதி நரவானே தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் வடமேற்கு எல்லையில் பயங்கரவாதம் தொடர் அச்சுறுத்தலாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குளிர்காலம் ஆரம்பித்துள்ளமையால், பனிப்பொழிவு அதிகரிக்கும் முன்னர் நாட்டின் எல்லைக்குள் பயங்கரவாதிகள் ஊடுருவ முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதிகளின் முயற்சிகள் அனைத்தையும் இராணுவம் முறியடிக்குமென நரவானே தெரிவித்துள்ளார்.


## கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை





| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.09.08 | பிறந்த திகதி - 1978.10.02 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - கார்த்திகை 4 | நட்சத்திரம் - அத்தம் |
| பாவம் - 42 1/2 | பாவம் - 22 1/4 |
| செவ் - -------- | கல்வி - BA, MA பட்டதாரி |
| கல்வி - Banking Diploma | தொழில் - அபிவிருத்தி உத்தியோத்தர் |
| தொழில் - வங்கி அதிகாரி | எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம் |
| எதிர்பார்ப்பு - பட்டதாரி, அழகானபெண் | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மக்கள் பிரதிநிதிகள் வாக்காளர்கள் குழு பைடனின் வெற்றியை உறுதிசெய்யட்டும்!

## அதன்பின் வெளியேறுவேன் என்கிறார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடனின் வெற்றியை மக்கள் பிரதிநிதி வாக்காளர்கள் குழு உறுதி செய்து அறிவித்தால், வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறுவேன் என அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஆனால், ஜோ பைடனின் வெற்றியை அவர்கள் அங்கீகரித்தால், பெரிய தவறு செய்தவர்களாக ஆவார்கள். இந்தத் தேர்தலில் பெருமளவில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று ட்ரம்ப் மேலும் கூறினார்.

கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் வெற்றி உறுதியாகியுள்ள நிலையிலும், தற்போதைய ஜனாதிபதியும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான ரொனால்ட் ட்ரம்ப் அதனை ஏற்கவில்லை. தேர்தலில் தனது தோல்வியை முறைப்படி ஏற்க அவர் மறுத்து வருகிறார்.

தேர்தலில், மொத்தமுள்ள 538 மக்கள் பிரநிதிதி வாக்குகளில், ஜோ பைடனுக்கு 306 வாக்குகளும், ட்ரம்ப்புக்கு 232 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இதையடுத்து, அந்நாட்டு வழக்கப்படி வரும் டிசெம்பர் 14ஆம் திகதி மக்கள் பிரதிநிதி வாக்காளர்கள் கூடி ஜோ பைடனின் வெற்றியை உறுதி செய்து அறிவிக்க உள்ளனர். புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழா ஜனவரி 20ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இதற்கிடையில் அதிகார மாற்றத்துக்கு அனுமதி மறுத்து வந்த ட்ரம்ப், பின்னர் மனம் மாறி இரண்டு நாள்களுக்கு முன் அதிகார மாற்றத்துக்கு ஒப்புக் கொண்டார். ஆனால் தற்போது மக்கள் பிரதிநிதி வாக்காளர்கள் குழு உறுதி செய்து அறிவித்தால், வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறுவேன் என கூறியுள்ளார்.

# இந்தோனேசியாவில் நான்கு கிறிஸ்தவர் ஐ.எஸ். போராளிகளினால் படுகொலை!



உலகின் மிகப்பெரிய முஸ்லிம் பெரும்பான்மை நாடான இந்தோனேஷியாவில் நால்வரை படுகொலை செய்த நபர்களை தேடும் பணிகளை அந் நாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சுலவேசி தீவில் ஐ.எஸ் பயங்கரவாத குழுவுடன் தொடர்புடைய பத்து தீவிரவாதிகள் வெள்ளிக்கிழமை துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் தலையை துண்டித்தும் கழுத்தை அறுத்தும் நான்கு பேரை கொலை செய்துள்ளனர்.

மத்திய சுலவேசி மாகாணத்தில் உள்ள லெம்பன்டோங் கோவா கிராமத்தில் வெள்ளிக்கிழமை காலை பதுங்கியிருந்த தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் தாக்குதல் நடத்தியவர்கள் பல வீடுகளை எரித்தும் உள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படாத நிலையில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல் இந்தோனேஸியாவில் உள்ள கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு எதிரான மற்றொரு தீவிரமான தாக்குதல் என்று மனித உரிமைகள் கண்காணிப்பக ஆராய்ச்சியாளர் ஆண்ட்ரியாஸ் ஹர்சனோ சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஈரானிய அணு விஞ்ஞானி கொலை அப்பட்டமான மனித உரிமை மீறல்!

## கட்டார் கடும் கண்டனம்



ஈரானிய அணு இயற்பியலாளர் மொஹ்சென் ஃபக்ரிசாதே படுகொலை செய்யப்பட்டமைக்கு கட்டார் அரசாங்கம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், இது தெளிவான மனித உரிமை மீறல் என கட்டாரின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான கே் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல்தனி நேற்று (சனிக்கிழமை) தெரிவித்துள்ளார்.

மேலும், ஈரானின் வெளியுறவு அமைச்சர் முஹம்மது ஜவாத் ரீப்புடன் தொலைபேசியில் உரையாடிய அவர், ஃபக்ரிசாதே உயிரிழப்பு தொடர்பான இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானுக்கு கிழக்குப் பகுதியில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் ஃபக்ரிசாதே மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொலை செய்துள்ளனர் என ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஃபக்ரிசாதே, இறுதியாக ஈரானின் பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு அமைப்பின் தலைவராகப் பணியாற்றினார்.

அணு ஆயுதங்களை உருவாக்குவதற்கான ஈரானிய முயற்சிகளின் சூத்திரதாரி ஃபக்ரிசாதே என மேற்கு நாடுகள் நீண்ட காலமாக சந்தேகிக்கின்றன.

ஆனால் ஈரான் அத்தகைய எந்தவொரு முயற்சியிலும் ஈடுபடவில்லை என மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதியோப்பியாவில் உக்கிரமான போர் சூடானுக்கு படையெடுக்கும் அகதிகள்

## உதவி கோருகிறது ஐ.நா.



எதியோப்பிய அரசாங்கத்துக்குள் அந்நாட்டின் தன்னாட்சி பிராந்தியமான டைக்ரே பிராந்திய ஆயுதக் குழுவுக்கும் இடையில் உக்கிர போர் நடைபெறுகிறது.

இந்நிலையில், அருகிலுள்ள சூடானுக்கு அகதிகளின் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து வருகின்றமையால் அவர்களுக்கு உதவ, 15 கோடி டொலர் நிதி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகாமைத் தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார்.

எல்லை கடந்து சூடானுக்கு தப்பிவந்துள்ள அகதிகள் தங்கியுள்ள உம் ரக்பா என்ற முகாமுக்கு சென்றிருந்த அவர், இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் நான்காம் திகதி எதியோப்பியாவின் கூட்டாட்சிப் படைகளுக்கும் டைக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் படைகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது.

இதனால், 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எதியோப்பிய அகதிகள் சூடானில் தஞ்சம் புகுந்துள்ளனர். எனினும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூடானால் அகதிகளுக்கு உதவுவதிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வாறு தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு நீர், தங்குமிடம், உணவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்க சூடானுக்கு ஆறு மாதங்களுக்கு 15 கோடி டொலர் தேவைப்படுவதாக பிலிப்போ கிராண்டி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சூடானுக்கு நிதி உள்ளிட்ட வளங்களை உடனடியாக வழங்குமாறு நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, எதியோப்பிய போரில் இருந்து தப்பி, ஒவ்வொரு நாளும் 500 முதல் 600 அகதிகள் வரை எல்லையைத் தாண்டி வருகின்றனர்.

அத்துடன், அரசாங்க புள்ளி விவரங்களின்படி, சூடானில் கிட்டத்தட்ட 4 போடியே 20 லட்சம் மக்களில் 65 வீதமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பாகக் கவலை வெளியிட்டுள்ள கிராண்டி, ஐக்கிய நாடுகள் சபையின் வருகைக்கு எதியோப்பிய அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# கருக்கலைப்பு சட்டமூலத்துக்கு எதிர்ப்பு ஆர்ஜென்டினாவில் மக்கள் போராட்டம்!



ஆர்ஜென்டினாவில் கருக்கலைப்பு சட்ட மூலததுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புனோஸ் எய்ரிஸில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அரசுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்து முழக்க மிட்டனர்.

அத்தோடு, அரசைக் கண்டிக்கும் வகையில் வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மற்றும் குழந்தை வடிவ பொம்மை ஒன்றையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ஜென்டினாவில் கருக்கலைப்பு செய்யும் சட்ட மூலத்துக்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்றும் இதனை திரும்பப் பெற வலியுறுத்தியுமே நாட்டில் உள்ள பெரும்பான்மையான கத்தோலிக்க மக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பரிந்துரைக்கப்பட்ட சில மருந்துகளின் மொத்த ஏற்றுமதியை முடக்கிய கனடா



பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு உள்நாட்டிலேயே பற்றாக்குறை ஏற்பட்டமையின் காரணமாக நேற்று (சனிக்கிழமை) மருந்து ஏற்றுமதியை கனடா மொத்தமாக நிறுத்தியுள்ளது.


அமெரிக்கர்களுக்கு கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில மருந்துக்கான விலைகளைக் குறைக்க அனுமதிக்கும் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் முயற்சிக்கு பதிலளிக்கும் விதமாக கனடா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கனேடிய சந்தைக்குள் இருக்கும் சில மருந்துகள் கனடாவுக்கு வெளியே நுகர்வுக்காக விநியோகிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளன, அந்த விற்பனை, மருந்து பற்றாக் குறையை ஏற்படுத்தும் அல்லது மோசமாக்கும் என கனேடிய சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனுடனான தனது முதல் விவாதத்தில் ட்ரம்ப் இந்தத் திட்டத்தைக் குறிப்பிட்டார்.

இருப்பினும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செப்ரெம்பர் மாதம் மற்ற நாடுகளுக்கு மருந்துப் பொருள்கள் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறினார், மேலும் கனேடியர்களின் தேவைகளைப் பாதுகாப்பதே தனது முன்னுரிமை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

## தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் தபால் விறியோகிக்கத் தீர்மானம்!



தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடிதங்களை விநியோகிக்கத் தயாராக உள்ளதாக தபால் திணைக்கள பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

மேற்படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரச, தனியார் நிறுவனங்கள் தபால் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் இதனை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

மேலும், குருணாகலை மாவட்டத்தில் முடக்கப்பட்டுள்ள தபால் நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப் புலிகளுக்கு வெளிநாட்டில் நிதி சேகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை!

### என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, நவ.29

விடுதலைப் புலிகளிற்கு வெளிநாடுகளில் நிதி சேகரிப்பவர்களை கண்டுபிடித்து நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக இன்டர்போல் மற்றும் சி.ஐ.டி. மற்றும் புலனாய்வு பிரிவினரின் உதவிகளைப் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு பலர் நிதி சேகரிக்கின்றனர் என்றும் இது சட்டவிரோதமானது என்பதால் நாங்கள் இன்டர்போலின் உதவியை நாடவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



முன்னைய அரசாங்கம் இவர்கள் குறித்து தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதால் இந்த வலையமைப்பு விரிவடைந்துள்ளது எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

### ஒரு லட்சம் வேலை வாய்ப்புகள்:

## முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் முதற்கட்டப் பயிற்சிகள் நிறைவு!







ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டவர்களுக்கான நிறைவு விழாக்கள் நேற்று இடம்பெற்றுள்ளன.

இதன்படி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நிறைவு விழாக்கள் அந்தந்த மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

#### முல்லைத்தீவு மாவட்டம்

இதன்படி, முல்லைத்தீவில் வட்டுவாகல் பகுதியில் இளைஞர் படையணி அலுவலகத் தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, மாவட்ட அரச அதிபர், இளை ஞர் படையணி நிலையப் பொறுப்பதிகாரி, வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற்கட்டமாக தொழிலுக்காகத் தெரிவுசெய் யப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்ட 54 பயனாளிகள் கலந்துகொண்டனர். இவர்களில் தன்னார்வத்துடன் இரத்த தானம் செய்வதற்கு முன்வந்த பலரும் இரத்தம் தானம் செய்தமையுடன் கலை நிகழ்வுக்ளும் இடம்பெற்றன.

#### வவுனியா மாவட்டம்

இதேவேளை, ஒருலட்சம் வேலைவாய்ப்பில் தெரிவான வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 108 பேருக்கான பயிற்சியும் நிறைவு செய்யப் பட்டுள்ளது.

இந்த நிறைவு நிகழ்வு, வவுனியா, ஈரப் பெரிய குளம் தேசிய இளைஞர் படையணி அலுவலகத்தில் நடைபெற்றது.

14 நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சி நேற்றோடு நிறைவடைந்ததோடு, பயிற்சியில் பங்குபற்றிய அனைவரும் இரத்ததானமும் மேற்கொண்டு தமது கடமையை ஆரம்பித்தனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர், வைத்திய அதிகாரி, பல்நோக்கு அபிவிருத்தி செயலணி, வவுனியா மாவட்ட பிரதான பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

#### மன்னார் மாவட்டம்

மேலும், மன்னார் மாவட்டத்திலும் ஒரு லட் சம் வேலைத் திட்டத்தில் இளைஞர் யுவதிகளுக் கான தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்பட் டுள்ளன.

இதன்படி, மன்னார் மாவட்டத்தில் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 42 இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி கடந்த இரண்டு வாரங்கள் மன்னார் இளைஞர் படையணி முகாமில் இடம்பெற்றது.

இந்நிலையில், குறித்த பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்று மன்னார் இளைஞர் படையணி முகாமில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 834 பேர் தெரிவுசெய்யப்பட்டு முதற்கட்டமாக 42 பேர் இந்த இரண்டு வார தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆறு மாதப் பயிற்சியில் தற் போது இரண்டு வார பயிற்சி மட்டுமே நிறைவு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கார்த்திகையில் தீபமேற்றி கடவுளருள் பெறுவோமே!

கார்த்திகைத் தீபம் ஏற்றுவோம் வாரீர்
கந்தனை நினைந்து போற்றுவோம் வாரீர்
வீட்டிலும் வெளியிலும் ஏற்றுவோம் வாரீர்
வேலவன் திருவடி பற்றுவோம் வாரீர்

அகமதில் உறைந்திடும் ஆணவ இருளை
அகற்றிடத் தீபம் ஏற்றுவோம் வாரீர்
சிவனது மைந்தனைச் சிந்தையில் இருத்தி
சிறப்புடன் தீபம் ஏற்றுவோம் வாரீர்

கார்த்திகைப் பெண்களால் ஏந்திய குழந்தை
கந்தனாய் வந்தனன் கலியுகம் காக்க
கந்தனைச் சொந்தமாய் கொண்டிடும் பக்தர்
கார்த்திகைத் தீபம் ஏற்றுவோம் வாரீர்

மாலயன் அடிமுடி தேடிய நிலையில்
மாபெரும் சோதியாய் வந்தனன் சிவனும்
பேரொளிப் பிளம்பு தோன்றிய நாளை
யாவரும் கார்த்திகைத் தீபமாய் கண்டனர்

அக்கினித் தலமாய் ஆகிய தலத்தில்
அகண்ட தீபம் ஏற்றுவார் அடியார்
கார்த்திகை நாளில் ஏற்றிடும் தீபம்
கந்தனைத் தந்தையை இணைத்திடும் தீபம்

சோதியாய் சுடராய் ஆகிடும் தெய்வம்
ஆதியாய் அந்தமாய் ஆகிடும் தெய்வம்
அப்பனாய் பிள்ளையாய் அமைந்திடும் தெய்வம்
அனைத்துமே கார்த்திகைத் தீபத்துள் அடங்கும்

காணுகின்ற பேரொளியே கடவுளாய் தெரிகிறது
கார்த்திகையில் தீபமதில் காணுகிறோம் கடவுளையே
கண்காணா தெய்வமதை ஒளியாக நம்புகிறோம்
கார்த்திகையில் தீபமேற்றி கடவுளருள் பெறுவோமே

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா



## கொரோனா தொடர்ந்தால் சாதாரண பரீட்சை ஒத்திவைக்க வேண்டி வரும்!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் தொடர்ந்தால் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சசையை ஒத்திவைப்பதை தவிர்க்க முடியாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 27 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டபடி பரீட்சை நடத்தப்படுமா என்பது தொடர்பாக முடிவு ஒரு வாரத்திற்குள் எட்டப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று (சனிக்கிழமை) கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 165 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 100 பாடசாலைகள் மட்டுமே நவம்பர் 23 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டன என்றும் மேல் மாகாணத்திலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொரோனா வைரஸ் மற்றும் அது தொடர்பான அச்சத்தை கருத்தில் கொண்டு நாட்டின் சில பகுதிகளில் பாடசாலைகளை அதிகாரிகள் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்,

குறிப்பாக இந்த நிலைமை தொடர்ந்தால் இந்த நிலையைக் கருத்தில் கொண்டு தீர்க்கமான முடிவு அடுத்த வாரம் எட்டப்படும் என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2020 இல் வெளியிடப்பெற்றது.